நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.8/2025

<u>அ.சா:9 (LW 13)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாயராஜலட்சுமி. | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | காவல் ஆய்வாளர். |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

23.06.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------------

(எதிரி ஆஜர்.)

*** Evidence recoded by through V.C**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 02.39 மு.ப

நான் தற்பொழுது திண்டுக்கல் மாவட்டம் மதுவிலக்கு காவல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.06.2022ம் தேதி தேனி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் சார்பு ஆய்வாளர் திரு.முருகானந்தம் அவர்கள் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.196/2022 ச/பி.147, 148, 294(b), 324, 307 இ.த.ச.ஆக பதிவு செய்யப்பட்ட வழக்கை பார்வையிட்டு 13.06.2022ம் தேதி 00.30 மணிக்கு சம்பவ இடமான தேனி விஸ்வதாஸ் காலனி 2வது தெருவில் உள்ள வாதியின் வீட்டு முன்பு சாட்சிகள் பாஸ்கரன், வினோத் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சம்பவ இடத்தில் வைத்து


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.06.23 15:16:50 +0530

மேற்கூரிய தேதியில் 01.40 மணியளவில் சாட்சிகள் பாஸ்கரன், வினோத் ஆகியோர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சொத்தான 38 செ.மீ நீளமுள்ள அருவாளை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தேன். பின்னர் சாட்சிகளா கண்ணன், கோவிந்தராஜ், உமா மகேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரியை தவிர மற்ற எதிரிகள் வழக்கில் சம்பந்தப்படாததால் சட்டப்பிரிவு மாறுதல் மற்றும் எதிரி நீக்கம் அறிக்கை தயார் செய்தேன். அன்றைய தினமே 11.00 மணிக்கு எதிரி ஜெயகுரு த/பெ.தர்மன் என்பவரை சாட்சிகள் பாஸ்கரன், வினோத் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து எவ்வித துன்புறுத்தலோ ஆசை வார்த்தையின்றி அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 14.06.2022ம் தேதி சாட்சிகளான சண்முகபிரியா, சாந்தி, சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.07.2022ம் தேதி வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த வேலம்மாள் மருத்துவமனை மருத்துவர் திரு.ராம்கிருபாகர் தங்கராஜ் என்பவரிடம் காயச்சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சண்முகபிரியா என்பவருக்கு சிகிச்சையளித்த நட்டாத்தி மருத்துவமனை மருத்துவர் திரு.ராஜசேகரன் என்பவரிடம் காயச்சான்றிதழ் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மற்ற வழக்கு சாட்சிகளான சன்னாசி, பாஸ்கரன், வினோத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணை முடித்துக்கொண்டு எதிரி மீது ச/பி.294(b), 324, 307 இ.த.ச.ஆக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். எனக்கு பின்னர் வந்த புலன் விசாரணை அதிகாரியான வெங்கடாசலாபதி அவர்கள் மேற்கொண்டு விசாரணை செய்து சாட்சிகள் பாண்டியன், கண்ணிமார் செல்வி, வளர்மதி, அழகேந்திரன், முத்துசாமி ஆகியோர்களை விசாரணை செய்து தனது புலன் விசாரணை முடித்து எதிரி ஜெயகுரு மீது ச/பி.294(b), 324, 307 இ.த.ச படி தனது இறுதியறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இவ்வழக்கின் புகார் **அ.சா.ஆ.6.** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7.** பார்வை மகஜர் **அ.சா.ஆ.8**. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9.** எதிரியின் ஒப்புதல்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.03.23 15:16:54 +0530

வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10.** அத்தாட்சி **அ.சா.ஆ.11.** படிவம் 91 **அ.சா.ஆ.12.** கண்ணன் என்பவரின் காயச்சான்று **அ.சா.ஆ.13.** சண்முகப்பிரியா என்பவரின் காயச்சான்று **அ.சா.ஆ.14.** போலீஸ் இண்டிமேசன் **அ.சா.ஆ.15.** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.16.** எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட அருவாள் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

மருத்துவமனையிலிருந்து உரிய தகவல் பெற்று மருத்துவமனைக்கு நேரடியாக சென்று புகார் வாக்குமூலம் பெறாமல் சரியான வகையில் முதல் விசாரணை செய்யாமல் புகார்தாரரிடம் எழுதப்படாத வெள்ளைதாளில் கைரேகை மட்டும் பெற்று பின்னிட்டு எங்கள் காவல் நிலையத்தில் வைத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்று பார்க்காமல் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து காவல் நிலையத்தில் வைத்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலும், எதிரியிடம் உரிய சட்டவிதிகளை பின்பற்றி ஒப்புதல் வாக்குமூலம் பெறாமல் காவல் நிலையத்தில் ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் மட்டும் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சிகளின் கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சென்று உரிய அத்தாட்சி தயாரிக்காமலும் சான்று பொருள் கைப்பற்றாமல் காவல் நிலையத்தில் வைத்து சான்று பொருள் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை நேரடியாக சென்று வாக்குமூலம் பதிவு செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் தனிச்சையாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த எதிரி புகார்தாரரை அசிங்கமான வார்த்தையால் பேசி இறப்பினை ஏற்படுத்தும் நோக்கில் அருவாளினால் வெட்டி காயம் ஏற்படுத்தி


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.06.23 15:16:59 +0530

கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என எனது விசாரணையில் தெரிவித்துள்ளது பொய் என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் காலதமாத்துடன் குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் இந்த எதிரி இவ்வழக்கிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர் என்றும் சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 02.39 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.06.23 15:17:02 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:23.06.2026